செய்தி வெளியீடு எண் : 621 நாள் : 24.7.2010

**ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புற புனரமைப்பு திட்டத்தின் கீழ் சென்னை மாநகரில் மழைநீர் வடிகால் மற்றும் கால்வாய்கள் அமைத்தல்**

**திட்டத்தின் அவசியம் :**

வடகிழக்கு பருவமழையின் போது பெரும்பாலும் சென்னை மாநகரில் வெள்ளப்பெருக்கினால் தாழ்வான பகுதிகளில் வெள்ளநீர் புகுந்து மக்களின் அன்றாட வாழ்க்கை பாதிப்படைதல், உயிர்சேதம் உள்கட்டமைப்புகளுக்கு சேதம் போன்ற இயற்கை சீரழிவுகள் ஏற்படுகின்றன. பாதிப்புகளை சீர் செய்வதற்கும் ஈட்டுத்தொகை வழங்குவதற்கும் பலகோடி ரூபாய் செலவு செய்யப்பட்டுவருகிறது.

இதன் அடிப்படையில் சென்னை மாநகராட்சி தன் பராமரிப்பின் கீழ் வரும் சிறிய மழைநீர் வடிகால் மற்றும் பொதுப்பணித்துறையின் பராமரிப்பின் கீழ் வரும் பெரிய வடிகால் மற்றும் நீர் வழித்தடங்பள் ஆகியவற்றை ஒருங்கிணைத்து மேம்படுத்தி சீர் செய்வதற்கு மாநகராட்சி மூலம் ஒரு பெரிய திட்டம் மேற்கொள்ள முடிவு செய்யப்பட்டது.

**விரிவான திட்ட அறிக்கை:**

இதன் அடிப்படையில் சென்னை முழுவதும் **12** வடிநிலங்களை வடக்கு, மத்திய, தெற்கு மற்றும் கிழக்கு ஆகிய **4** பகுதிகளாக பிரித்து மழைநீர் வடிகால் திட்டங்கள் தயாரிக்கப்பட்டது. **1447.91** கோடி ரூபாய் மதிப்பீட்டில் இந்த **4** திட்டங்களும் **04.12.2008** அன்று மாண்புமிகு உள்ளாட்சி துறை அமைச்சர் அவர்கள் தலைமையில் நடைபெற்ற எட்டாவது மாநில வழிகாட்டி குழு (State Level Steering Committee) கூட்டத்தில் ஒப்புதல் வழங்கப்பட்டு மத்திய அரசிற்கு பரிந்துரைக்கப்பட்டது.

மத்திய அரசின் ஒப்புதல் :

இந்த நான்கு திட்டங்களும் தமிழ்நாடு நகர்ப்புற நிதி மற்றும் உள்கட்டமைப்பு மேம்பாட்டுகழகம் (TUFIDCO) மூலம் 10.12.2008 அன்று மத்திய ஜவஹர்லால் நேரு தேசிய நகர்புற புனரமைப்பு திட்ட ஆணையத்திற்கு அனுப்பப்பட்டது. அதன் தொடர்ச்சியாக மத்திய அரசின் ஆலோசகர்களின் தொழிற்நுட்ப பரிசீலனையின்போது சென்னை மாநகராட்சி, பொதுப்பணித்துறை பொறியாளர்கள் மற்றும் ஆர்.வீ. அசோசியேட்ஸ் கலந்தறிதற்குறியவர் ஆகியோர் உடனிருந்து நான்கு திட்டங்களுக்கும் பின்வருமாறு ஒப்புதல் வழங்கப்பட்டது.

| வரிசை எண் | சென்னையில் வடிநிலத்தின் பெயர் | திட்ட மதிப்பீடு (கோடியில்) | மதிப்பீட்டில் பொதுப்பணித்துறையின் பகுதி (கோடியில்) | மதிப்பீட்டில் மாநகராட்சியின் பகுதி (கோடியில்) |
|---|---|---|---|---|
| 1. | வடக்கு | 359.86 | 82.69 | 277.17 |
| 2. | மத்திய | 345.00 | 83.89 | 261.11 |
| 3. | கிழக்கு | 444.07 | 303.67 | 140.40 |
| 4. | தெற்கு | 298.98 | 162.78 | 136.20 |
| **மொத்தம்** | | **1447.91** | **633.03** | **814.88** |

மேற்கண்டவாறு ஒப்புதல் அளிக்கப்பட்ட மொத்த திட்ட மதிப்பீட்டில் தமிழக அரசு, பொதுப்பணித்துறைமூலம் பெரியகால்வாய்களில் மேற்கொள்ளப்படவேண்டிய பணிகள் விரைவாக செயலாக்க 10 சிப்பங்களுக்கு அரசு ஆணை எண்.7 பொ.ப.(கே.1) துறை நாள்: 06.01.2010இல் ரூ.633.03 கோடிக்கு நிர்வாகஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

இப்பணிகள் 29.05.2010 அன்று, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் துவக்கி வைக்கப்பட்டது. மேற்கண்ட பணிகள் 2012–13 நிதியாண்டில் முழுமையாக நிறைவேற்றப்படும்.

இப்பணிகளின் விவரங்கள் மற்றும் தற்போதயை நிலை கீழ்க்கண்ட வாறு பட்டியலிடப்பட்டுள்ளது.

## பொதுப்பணித்துறை மூலம் சென்னை மாநகர பெரிய வடிகால்களை ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புற புனரமைப்பு திட்டத்தின் கீழ் மேம்படுத்தும் பணிகள்.

| சிப்பம் எண். | | பணிகள் | மதிப்பீட்டுத் தொகை (ரூ. கோடியில்) | பணியின் தற்போதைய நிலை |
|---|---|---|---|---|
| 1. | அ | கொடுங்கையூர் கால்வாயினை 400மீ. நீளத்திற்கு மேம்படுத்துதல் | 1.15 | பணிகள் துவங்கப்பட்டு முன் ஆயத்தப்பணிகள் தொடர்ந்து நடை பெற்று வருகிறது. விரைந்து செயல்படுத்தப்பட்டு குறித்த காலத்தில் முடிக்கப்படும். |
| | ஆ | கொளத்தூர் ஏரி உபரிநீரை வெளியேற்ற புதிய கால்வாய் அமைத்தல் | 19.00 | |
| | இ | ஓட்டேரி நல்லா கால்வாயிலிருந்து கூவம் ஆற்றிற்கு புதிதாக குறுக்கு வெட்டு கால்வாய் அமைத்தல் | 9.88 | |
| | ஈ | ஓட்டேரி நல்லா கால்வாயை மேம்படுத்துதல். | 33.02 | |
| 2. | அ | மதுரவாயல் ஏரியின் உபரி நீர் கால்வாயினை மேம்படுத்துதல் | 17.52 | பணிகள் துவங்கப்பட்டு முன் ஆயத்தப்பணிகள் தொடர்ந்து நடை பெற்று வருகிறது. விரைந்து செயல்படுத்தப்பட்டு குறித்த காலத்தில் முடிக்கப்படும். |
| | ஆ | விருகம்பாக்கம் –அரும்பாக்கம் கால்வாயிலிருந்து கூவம் ஆற்றிற்கு புதிய நேர்வெட்டுக்கால்வாய் அமைத்தல் | 25.98 | |
| | இ | விருகம்பாக்கம் –அரும்பாக்கம் கால்வாயினை மேம்படுத்துதல் | 40.39 | பணிகள் துவங்கி தொடர்ந்து நடைபெற்று வருகிறது. |
| 3. | | வடக்கு பக்கிங்காம்ம கால்வாயினை மேம்படுத்துதல் | 110.05 | பணிகள் துவங்கப்பட்டு முன் ஆயத்தப்பணிகள் தொடர்ந்து நடை பெற்று வருகிறது. விரைந்து செயல்படுத்தப்பட்டு குறித்த காலத்தில் முடிக்கப்படும். |
| 4. | | மத்திய பக்கிங்காம் கால்வாயினை மேம்படுத்துதல் | 68.62 | ஒப்பந்தப்புள்ளி விரைவில் கோரப்படவுள்ளது |
| 5. | | தெற்கு பக்கிங்காம் கால்வாயினை, அடையாற்றிலிருந்து ஒக்கியம் மடுவு வரை மேம்படுத்துதல் | 46.86 | பணிகள் துவங்கப்பட்டு முன் ஆயுத்தப்பணிகள் நடைப்பெற்று வருகிறது. விரைந்து செயல்படுத்தப்பட்டு குறித்த காலத்தில் முடிக்கப்படும். |
| 6. | | தெற்கு பக்கிங்காம் கால்வாயினை, ஒக்கியம் மடுவு முதல் முட்டுக்காடு வரை மேம்படுத்துதல் | 78.14 | பணிகள் துவங்கப்பட்டு முன் ஆயுத்தப்பணிகள் நடைப்பெற்று வருகிறது. விரைந்து செயல்படுத்தப்பட்டு குறித்த காலத்தில் |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | | முடிக்கப்படும். இதுவரை செலவிடப்பட்ட தொகை (Mobilization Advance) ரூ. 2.00 கோடி |
| 7. | அ | வீராங்கல் ஓடையை மேம்படுத்தி வெள்ளத்தடுப்பு சுவர் அமைத்தல் | 23.90 | பணிகள் துவங்கப்பட்டு தொடர்ச்சியாக நடைபெற்று வருகிறது. குறித்த காலத்தில் முடிக்கப்படும் |
| | ஆ | வேளச்சேரி ஏரி உபரி நீரினை பக்கிங்காம் கால்வாய்க்கு திருப்ப புதிதாக இணைப்பு கால்வாய் அமைத்தல் | 58.15 | பணிகள் துவங்கப்பட்டு முன் ஆயத்தப்பணிகள் தொடர்ந்து நடை பெற்று வருகிறது. தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு ரூ. 11.40 கோடி செலுத்தப்பட்டுள்ளது. |
| 8. | | அம்பத்தூர் ஏரியின் உபரிநீர் வடிகாலினை மேம்படுத்துதல் | 19.63 | முதல் கட்ட பணியாக அம்பத்தூர் தொழிற்பேட்டையில் நில மாற்றம் செய்யும் பணிகள் நடைபெற்று வருகிறது. |
| 9. | | போரூர் ஏரியின் உபரிநீர் வடிகாலினை மேம்படுத்துதல் | 26.96 | முதல் கட்ட பணியாக நில ஆர்ஜித பணிகள் நடைபெற்று வருகிறது. |
| 10. | | தெற்கு பக்கிங்காம் கால்வாயின் வெள்ள நீரினை ஒக்கியம் மடுவிலிருந்து கடலுக்குத் திருப்ப புதிதாக நேர்வெட்டுக் கால்வாய் அமைத்தல். | 53.76 | முதல் கட்ட பணியாக நில ஆர்ஜித பணிகள் நடைபெற்று வருகிறது. |
| | | **மொத்தம் ரூ.** | **633.03 கோடி** | |

4/4

வெளியீடு, இயக்குநா.
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
தலைமைச் செயலகம், சென்னை-9